# நிறுவுனர் நினைவுப் பேருரை

## அமரர் . திரு. சின்னத்தம்பி கார்த்திகேசு



யா/கோண்டாவில் பரஞ்சோதி
வித்தியாலயத்தின் நிறுவுனர்

அமரர் . திரு. சின்னத்தம்பி கார்த்திகேசு

அவர்களின் உருவச்சிலை 25.09.2014
அன்று திறந்து வைக்கப்பட்ட போது
நிகழ்த்தப்பட்ட நினைவுப் பேருரை

ஈழநாட்டின் வடபால் அமைந்த யாழ்ப்பாண நகருக்கு மிக அண்மையில் செழிப்பான செம்மண் வளம்மிக்க விவசாயக் கிராமமான உரும்பிராயில் அம்பலவாணர் சின்னத்தம்பியும் வள்ளியம்மையும் செய்த தவப்பயனாக அவர்கட்கு 1890ஆம் ஆண்டு கார்த்திகேசு புத்திரராக வந்துதித்தார்.

இவரது உடன் பிறப்புக்கள் ஒன்பது. இவர் குடும்பத்தில் அக்கறை கொண்டவராகவும் பெற்றோருக்குக் கீழ்ப்படிவு உள்ளவராகவும் திகழ்ந்தார். அவருடைய அழகான எடுப்பான தோற்றமும் அமைதியான சுபாவமும் எவருடைய மனதையும் ஈர்க்கக்கூடியதாக இருந்தது. உரும்பிராய் இந்துக்கல்லூரியில் கல்வி கற்றுக் கல்வியில் ஆர்வம் கொண்டவராக விளங்கினார். பிரித்தானிய அரசாங்கத்தின் கீழ் சிங்கப்பூரும் இருந்தமை பலருக்கு சிங்கப்பூரில் தொழில் வாய்ப்பினை அளித்தது. இவரும் அவ்வண்ணமே தொழில் வாய்ப்பினைப் பெற்று அவ்விடம் சென்றார். தனது குடும்பத்துக்கும் உதவிகளைச் செய்து சிறப்புடன் வாழ்ந்தார்.

சிங்கப்பூரில் புகையிரத இலாகாவில் கணக்குப் பரிசோதகராக தொழில் புரிந்து வரும் காலத்தில் கோண்டாவில் வடக்கில் இளையதம்பி சின்னப்பிள்ளை அவர்களின் மகளைத் திருமணம் செய்து கொண்டமை மேலும் செல்வச் சிறப்புடன் வாழவழி செய்தது. செல்வச் சிறப்புடன் வாழ்ந்த போதும் மனிதநேயம் கொண்டவராக விளங்கினார். கிராமத்தில் சகல

விடயங்களிலும் பங்கு கொண்டு மற்றையோருக்கு இயன்ற உதவிகள் புரிந்து மதிப்புக்குரியவராக விளங்கினார்.

சிங்கப்பூரிலிருந்து ஊருக்கு வந்திருந்த சமயம் அவரது குழந்தைகளின் இழப்பு அவரை சிங்கப்பூருக்குத் திரும்பிச் செல்ல மனம்விடவில்லை. தான் புகுந்த இடமாகிய கோண்டாவிலில் தொண்டுகள் செய்து நிலபுலங்களை கவனித்துக்கொள்ள விரும்பினார்.

இக்காலத்தில் நாவலர் அவர்களால் பாடசாலைகள் ஆரம்பிக்கும் பணி இடம்பெற்று அதனைத் தொடர்ந்து சேர்.பொன்.இராமநாதன் அவர்களின் துணையோடு ஆரம்பித்து வைத்த சைவ வித்தியா அபிவிருத்திச் சங்கம் இப்பணியை சிறப்புடன் செயலாற்றி வந்தது. இச்சங்கத்தின் தலைவராக விளங்கிய உயர்திரு. இராசரத்தினம் அவர்கள் பாடசாலைகளை நிருவகித்து வந்தார். சைவ மக்களின் ஆதரவோடு ஆசிரியர்களுக்குச் சம்பளத்தையும் வழங்கி வந்தார். இவரின் செயல் கண்டு ஊர்கள் தோறும் வாழ்ந்த சைவச் சான்றோரும் தங்கள் ஊர்களில் பாடசாலைகளை ஆரம்பிக்க முன்வந்தனர். இவ்வாறு 150க்கு மேலான பாடசாலைகள் ஊர்கள் தோறும் தோற்றம் பெற்றன. இவ்வாறு யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சைவ கனவான்கள் ஊர்கள் தோறும் பாடசாலைகளைத் தோற்றுவித்துக் கல்வியறிவினை மக்களுக்கு வழங்கி மகிழ்ந்தனர். இவ்வாறு மகிழ்ந்தவர்களுள் கோண்டாவிலைச் சேர்ந்த அமரர் சின்னத்தம்பி கார்த்திகேசு அவர்களும் ஒருவராவர்.

காலத்தின் தேவையை உணர்ந்து மண்வளம் மிக்க விவசாய கிராமமாகிய கோண்டாவில் வடக்கில் 'பரஞ்சோதி வித்தியாலயம்' என்ற பெயருடன் பாடசாலை அமரர் சின்னத்தம்பி கார்த்திகேசு அவர்களால் 1933 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

அப்போது கிராமத்தில் வாழ்ந்த மக்களின் பெரும் பாலானோர் விவசாயத்தை மேற்கொண்டவர்களாக காணப்பட்டனர். அப்போது இருந்த சூழலில் வாழ்ந்த பெற்றோர் கல்வியின் முக்கியத்துவத்தை அறியாதவர்களாகவும், போக்குவரத்து வசதியின்மை காரணமாகத் தூர இடங்களிலுள்ள பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்ப முடியாதவர்களாயும் காணப்பட்டனர். கிராமத்து சிறார்கள் கல்வி கற்று அறிவுடனும் ஒழுக்கமுடனும் வாழவழி செய்ய வேண்டும் என்ற தூண்டுதலினால் இந்துபோட் இராசரத்தினம் அவர்களை அணுகி அவரின் ஆலோசனை பெற்று தனது நிலத்தையும் வழங்கி தனது உடைமைகளையும் வழங்கிப் பரஞ்சோதி வித்தியாலயத்தை ஆரம்பித்தவர்.

நிறுவினர் அவர்கள் சிங்கப்பூரில் சேவையாற்றி வசதியோடு இருந்தமை பாடசாலையை ஆரம்பிக்கும் போது தேவையானவற்றைப் பாடசாலைக்கு வழங்க வசதியாக இருந்தது. தேவையான தளபாடங்களை வீட்டிலிருந்தே வழங்கினார். மாணவர்களை கற்றலில் ஈடுபடச்செய்யவும், அவர்களை பாடசாலைக்கு வரவழைக்கவும் உணவு கொடுத்து, கற்றலுக்கான உபகரணங்களையும் வழங்கினார். பாடசாலை தொடங்கிய நாள்

தொடக்கம் இறக்கும் வரை பாடசாலையின் முகாமையாளராக இருந்து பாடசாலையின் தேவைகளைப் படிப்படியாகப் பூர்த்தி செய்தார்.

அவர் பாடசாலையின் வளர்ச்சிக்காகப் பாடசாலைக்குத் தூர இடங்களிலிருந்து வந்த ஆசிரியர்களுக்குத் தேவையான உதவிகளை நல்கி கற்பித்தல் சிறப்புற நடக்க உதவினார். ஸ்தாபகராகிய திரு. கார்த்திகேசு அவர்களே பாடசாலை அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு முன்னின்று உழைத்தார் என்றும், அப்போது S.S.C வரை வகுப்புக்கள் நடைபெற்றன என்றும், முன்னாள் இப்பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றிய கோண்டாவில் கிழக்கைச்சேர்ந்த திரு.நா. சி. நடராசா அவர்களும், முன்பு இப்பாடசாலையில் கல்வி கற்ற கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த திரு.அமிர்தலிங்கம் அவர்களும், இப்பாடசாலையின் பழைய மாணவியும் ஸ்தாபகரின் மகளாகிய திருமதி. பரிபூரணம் மயில்வாகனம் அவர்களும் தெரிவித்தனர்.

அக்காலத்தில் சைவ ஆசிரியர்களின் பற்றாக்குறையை உணர்ந்து யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் சைவாசிரியர் கலாசாலை ஒன்றை 1928ல் இந்துபோட் இராசரத்தினம் அவர்களின் முயற்சியால் உருவாக்கப்பட்டது. அக்கலா சாலையின் ஊடாக சைவத்தமிழ் புலமை, முயற்சி, விவேகம் உள்ள ஆசிரியர்கள் உருவாக்கப்பட்டனர். ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்த இக்கலாசாலையின் பணி குறிப்பிடத்தக்க

தொன்றாகும். அக்காலத்தில் சைவப் பாடசாலைகளில் கற்பித்த இவ்வாசிரியர்களாலேயே தமிழும் சைவமும் தழைத்தோங்கி விளங்கியது எனலாம்.

இவ்வாறு பயிற்றப்பட்ட சிறந்த ஆசிரியர்களே பரஞ்சோதி வித்தியாலயத்திலும் கற்பித்தார்கள். அன்று படித்த மாணவர்கள் திறமைமிக்கவர்களாகவும் உருவாக்கப்பட்டார்கள். இங்கு கற்ற மாணவர்கள் பிற்காலத்தில் கல்விமான்களாகவும், சிறந்த ஆசிரியர்களாகவும் விளங்கியமை இதற்கு எடுத்துக் காட்டாகும்.

1945ஆம் ஆண்டு ஸ்தாபகர் மறைந்ததும் அவரைத் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயலாற்ற ஒருவரும் முன்வரவில்லை எனினும் இந்துப் போட்டின் நிருவாகத்தின் கீழ் பாடசாலை வந்தது. பாடசாலை தொடர்ந்தும் கல்விப் பணியை ஆற்றி வந்துள்ளது.

1960க்குப் பின் அரசாங்கப் பாடசாலைகளைப் பொறுப்பேற்று தனது நிருவாகத்தின் கீழ் பாடசாலைகளைக் கொண்டு வந்தது. அரசாங்க நிருவாகத்தின் கீழ் வந்த பின் அதிபர்கள், ஆசிரியர்கள் பலர் மாறி மாறி பாடசாலையில் கடமையாற்றினர். அவர்களுடைய சேவையால் பரஞ்சோதி வித்தியாலயம் தனது அறிவுச்சோதியை அணைய விடாது காத்தது. அவர்களுக்கு நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். குறிப்பாக அண்மையில் அதிபராக கடமையாற்றிய திரு.எஸ்.சண்முககுமார் அவர்கள் பரஞ்சோதி வித்தியாலயத்தின் வளர்சிக்குப் பெரும் பங்காற்றினர். அவரின் காலத்தில்

உபஅதிபராக கடமையாற்றிய திரு.த.சொக்கலிங்கம் அவர்களதும் அப்போது சேவையாற்றிய ஆசிரியர்களதும் ஒத்துழைப்போடும் சிறப்பாக செயலாற்றினர். புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைய மாணவர்களை ஊக்கப்படுத்தினார். இல்ல விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா என விழாக்களைச் சிறப்புற நடாத்தி வெற்றி கண்டார். பாடசாலை வளர்ச்சி பெற்றது.

இப்பாடசாலை ஸ்தாபகரின் சேவையை ஊர் மக்களுக்கு அறியச் செய்ததோடு ஸ்தாபகரின் வழித் தோன்றல்களைப் பாராட்டிக் கௌரவித்து அவரின் ஞாபகமாக அன்னாரின் திருவுருவத்தைக் காரியாலயத்தில் திறந்து வைத்த பெருமை அவரையும், துணையாய் நின்ற உப அதிபர், திரு.த. சொக்கலிங்கம் அவர்களையும் ஆசிரியர்களையுமே சாரும். அவர்களுக்கு ஸ்தாபகரின் குடும்பம் நன்றியைத் தெரிவிக்கிறது.

2002ம் ஆண்டு திரு.எஸ். சண்முககுமார் அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் பாடசாலை பல்துறையிலும் வளர்ச்சி அடைந்தது. எழுபத்திரண்டு வருடங்களாகக் கல்விப் பணியாற்றி வரும் பாடசாலையின் வரலாற்றையும் வெளியிட ஆவல் கொண்டிருந்தார். அவரது முயற்சிக்கு ஸ்தாபகரின் குடும்பத்தினரது நிதி உதவியுடன் பரஞ்சோதி மலரை வெளியிட்டு மகிழ்ச்சி அடைந்தார். இம் மலர் பாடசாலையின் ஆவணமாகவும் திகழ்கின்றது.

அமரர் சின்னத்தம்பி கார்த்திகேசு அவர்கள் கிராமத்து பாடசாலைக்குச் சேவையாற்றியதோடு கிராமத்து கோயில்,

போக்குவரத்து வசதி என்பவற்றிலும் தனது சேவையை ஆற்றினார்.

கோயிலின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு ஆகம விதிப்படி கோயில் அமைக்க ஊர்மக்களின் ஒத்துழைப்புடன் நிருவாக சபை அமைத்துப் பொருள் வசதிக்கான ஏற்பாடுகளைச் செய்து கோயிலை அமைக்க முன்னின்று உழைத்தார். பின்பு கோயிலைப் பொதுக் கோயிலாக்க ஊர் மக்களில் பெரும்பாலானோரின் விருப்பப்படி அதற்கான சட்ட ரீதியான ஒழுங்குகள் செய்து நிறைவேற்றினார்.

போக்குவரத்து வசதியல்லாமை இருந்தது. விவசாய பொருட்களை சந்தைப்படுத்தவோ மாணவர்கள் மக்கள் போக்குவரத்துச் செய்ய சிரமப்பட்டார்கள். இதை உணர்ந்து வீதி அமைக்கத் தனது காணிகளை விட்டுக் கொடுத்து அதற்கான முயற்சி செய்து அதனை நிறைவேற்ற வசதி செய்தார்.

சின்னத்தம்பி கார்த்திகேசு அவர்கள் கிராமத்து மக்களின் நன்மதிப்பைப் பெற்றதோடு அவர்களின் தேவைகள் ஏற்பட்ட போது உதவிகளையும் வழங்கி பேரும் புகழோடும் வாழ்ந்தார். கிராம மக்களின் விசுவாசம் ஒத்துழைப்பு என்பன இவருக்கு எக்காரியத்தையும் நிறைவேற்ற உதவியாக இருந்தது. இவர் மறைந்ததும் இவரோடு நின்று உழைத்தவர்களும் காலப் போக்கில் மறைந்து போயினர்.

அதிபர் எஸ். சண்முககுமார் காலத்தில் ஸ்தாபகரின் சிலை அமைத்து அவரின் சேவையைப் பாராட்ட வேண்டும் எனக் குறிப்பிட்டனர். அவ்வாறு குறிப்பிட்டது இன்று கைகூடியுள்ளது. இவ்வாறு சிலை அமைத்து நிறுவுனருக்கான விழா எடுப்பதும் அவர்களையிட்டு புகழாரம் செய்வதற்காக அல்ல. வரும் சந்ததியினரைச் செல்வச் சிறப்புடன் வாழும் போது மனித நேயம் கொண்டு வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைக்க வேண்டும் என எண்ணத் தூண்டுவதே இப்படிப்பட்ட விழாவின் நோக்கமாகும். இதனை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு நல்கிய அதிபர் திருமதி. கடம்பமலர் அவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினருக்கும், கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும் நிறுவுனர் குடும்பத்தினர் தங்கள் நன்றியினைத் தெரிவிக்கின்றனர்.



# நிறுவுனரின் புத்திரி
# திருமதி. பரஞ்சோதி குமாரசுவாமி
# (அவுஸ்திரேலியா)




**"அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்**
**ஆலயம் பதினாயிரம் நாட்டல்**
**அன்ன யாவினும் புண்ணியங்கோடி**
**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"**

*-மகாகவி பாரதியார்-*